# நாடகச் சக்கரவர்த்தி க.ப. பரராஜசிங்கம்

ஆழத்து முத்துக்கள் 60

பேராசிரியர் அ. துரைராஜா அவர்களால் 'நாடகச் சக்கரவர்த்தி' (1994) என்றும், கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர் களால் 'இசைநாடக நவரச கலைமணி' (1999) என்றும் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களால் 'கலைக்குரிசில்' (2001) என்றும் தியாக. சோமஸ்கந்தராஜக் குருக்கள் அவர்





களால் 'கலை அருள் வேந்தன்' (2008) என்றும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பரஞ்சோதி பரராஜசிங்கம் யாழ் மாவட்ட இசை நாடகக் கலைஞர்கள் வரிசையில் முன்னணியில் திகழ்பவர்.

யாழ். வடமராட்சி துன்னாலை வடக்கு, இந்திரம்மண் கோயிலடியைப் பிறப்பிடமாக வும் தென்புலோலியூரை வசிப்பிடமாகவும் கொண்ட பரஞ்சோதி பரராஜசிங்கம் 03.01.1949 இல் பிறந்தார். தந்தையார் 'கலைஞானகேசரி' பரஞ்சோதி, தாயார் சரஸ்வதி. குடும்பத்தின் சிரேஷ்ட புத்திரனான இவர், சிறுபராயம் முதலே கலைத்துறையில் ஆர்வத்துடன் செயற்பட்டார். பேரனார் தாமு கந்தையா, தந்தையார் க. பரஞ்சோதி ஆகியோர் இசை நாடகக் கலைஞர்களாகத் திகழ்ந்தமை இவரது கலைத்துறைப் பிரவேசத்துக்கு வலுச் சேர்த்தது. எனினும் துன்னையூர் இந்து கலாசார கலாமன்றத்தினால் 1969இல் மேடை யேற்றப்பட்ட 'சிலம்புச் செல்வி' இசை நாடகம் இவரது வாழ்வில் திருப்பு முனையாகியது. இதிலே முக்கியப் பாத்திரமான கோவலன் பாத்திரத்தை இவர் ஏற்றிருந்தார். இந்நிகழ் வுக்கு வருகை தந்திருந்த மூத்த கலைஞர் களின் ஆசியும், பாராட்டும் இவரது கலைப் பயணத்தை இன்னுமின்னும் பிரகாசமாக்கியது.

அன்றிலிருந்து முழுமூச்சாக ஆரம்பித்த இவரது கலைப் பயணம் கோவலன் (சிலம்புச் செல்வி), வேலன், வேடன் விருத்தன் (வள்ளி திருமணம்), அருச்சுனன் (பவளக் கொடி), அரிச்சந்திரன் (அரிச்சந்திரா), இராவணன் (இலங்கேஸ்வரன்), இயமதர்மன் (சத்தியவான் சாவித்திரி), துரியோதனன் (பாஞ்சாலி சபதம்), காத்தான், சிவன் (காத்தவராயன் சிந்து நடைக்கூத்து) எனப் பல பாத்திரங்களூடாக பரந்து விரிந்தது.

இசை நாடகத் துறையிலே நடிகராக ஆரம்பித்த இவரது பணி நெறியாளராகவும் பரிணமித்தது. முன்பு பயில் நிலையில் இருந்து பின்னர் ஆற்றுகை செய்யப்படாதிருந்த பாஞ்சாலி சபதம் இசை நாடகத்தினை 30க்கும் மேற்பட்ட இளங்கலைஞர்களை இணைத்து அகில இலங்கை இளங்கோ கழகத்தினூடாக நெறியாள்கை செய்து 2001இல் மேடை-யேற்றி இருந்தார். அத்துடன் அரிச்சந்திர மயான காண்டம் இசை நாடகத்தினை நெறியாள்கை செய்து பேராதனைப் பல்க-லைக் கழக தமிழ்ச்சங்கம், சங்கீத நாட்டிய சங்கம் ஊடாக 2003இல் கண்டி, கொழும்பு போன்ற இடங்களில் மேடையேற்றிப் பலரதும் பாராட்டைப் பெற்றார். சின்மயா மிஷன் தயாரித்த சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்தினை இவர் நெறியாள்கை செய்து கொழும்பில் மேடை யேற்றினார்.

அத்தோடு அகில இலங்கை இளங்கோ கழக ஆலோசகராகவும் வடமராட்சி வடக்கு பிரதேச கலாசார பேரவை, யாழ் மாவட்ட கலாசார பேரவை ஆகியவற்றின் செயற் குழு உறுப்பினராகவும் இருந்து கலை, கலாசார மேம்பாட்டுக்காக உழைத்து வருகின்றார்.

ஈழத்தின் இசை நாடக அரங்கின் புகழ் பூத்த கலைஞர்களாகிய நாடகயுவராஜன் சி.ரி. செல்வராஜா, நாடக கலாஜோதி வி.என். செல்வராஜா, நாடக திலகம் கே.வி. நற்குணம், நடிக கலாமணி வி. செல்வரத்தினம், கலை வேந்தன் பொ. தைரியநாதன், கலைஞான கேசரி க. பரஞ்சோதி, கலைஞான கேசரி வி.ரி. செல்வராஜா, மு.ந. சிவசுப்பிரமணியம், த. கண்ணதாசக் குருக்கள், இசை நாடக பூபதி செ. இரத்தினகுமார், கலைஞானகேசரி கனகரத்தினம், நகைச்சுவை மன்னன் மாஸ்ரர் சரவணமுத்து, ச. முருகானந்தன், த. கலாமணி, மா. ஆனந்தராஜன், கலாபூசனம் வே.க. பால சிங்கம், செ. மாகதேவன், கலைமாமணி தயாநிதி, விஜயபாஸ்கர், ந. விமலநாதன், ந. இரகு, திருமதி பார்வதி சிவபாதம், ஜஸ்ரின் தைரியநாதன், சி. பசுபதி, இ.குலசேகரம், அ. நடராசா, கே. யோகநாதன், இ. பால சுப்பிரமணியம் எனப் பலரோடும் இணைந்து நடித்துள்ளார்.

ஆயிரத்துக்கும் அதிகமான மேடைகளிலே இசை நாடகக் கலைஞராகப் பிரகாசித்த இவரை 'இயமன் பப்பா' என்றே இரசிகர்கள் அதிகமாக அழைப்பதுண்டு. இவர் இயமதர் மனாகத் தோன்றிய ஒரு சந்தர்ப்பத்தில் 'நான் பூலோகத்தில் இயமனைக் கண்டேன்' என்று நாடக யுவராஜன் சி.ரி. செல்வராஜா பாராட்டியதனை இவர் பெருமையுடன் நினைவு கூறுகின்றார்.

'வைரவி'யின் (நடிகமணி வி.வி. வைரமுத்து) சத்தியகீர்த்தியாகிய நான், இன்று என் மாணவன் அரிச்சந்திரனாக நடிக்கும் நாடகத் தில் அதே சத்தியகீர்த்தியாக மேடை ஏறுவ தில் பெருமை அடைகிறேன்' என்று தனது குருவாகிய நாடகதிலகம் கே.வி. நற்குணம் வாழ்த்தியதை மறக்க முடியாத அனுபவம் என்கிறார் க.ப.பரராஜசிங்கம் அவர்கள்.

இசை நாடகம், கூத்து, இவை தவிர புராண படனம், சொற்பொழிவு, பட்டி மன்றம் போன்ற துறைகளிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற் பட்டு வருகின்றார். இவருடைய பிள்ளைக ளான பரா. ரதீஸ், பரா. நமேஸ் ஆகியோரும் நாடக நடிகர்களாக, ஆய்வாளர்களாகத்

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

திகழ்வதோடு பட்டிமன்றம், வில்லிசை, கவியரங்கம், எழுத்து போன்ற துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர்.

க.ப.பரராஜசிங்கம் அவர்களது புராண படனப் பணியினைப் பாராட்டி 2005ம் ஆண்டு யாழ் சைவ பரிபாலன சபையினர் பொன்னாடை போர்த்துக் கௌரவித்திருந்தனர். வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையால் சிறந்த இசை நாடகக் கலைஞராக 2000ம் ஆண்டு கௌரவிக்கப்பட்டார். அத்துடன் 2009ம் ஆண்டு பருத்தித்துறை பிரதேச சபை யினர் இவரது கலைப் பணியினைப் பாராட்டிக் கௌரவித்திருந்தனர்.

1969ம் ஆண்டிலிருந்து முழுமையாக ஆரம பமான இவரது கலைப் பயணம் இசை நாடகம், கூத்து, பட்டிமன்றம், சொற்பொழிவு, புராண படனம் எனப் பரந்து விரிந்து செல்-கின்றது.

இப்பெரும் கலைஞனின் கலைக் குறிப்புக் களை அரியாலையூர் ச. உருத்திரேஸ்வரன் மூலமாக தாய்வீடு பெற்றுக்கொண்டது.

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்-களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்-வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

**இணையத்தளத்திலும் 'தாய்வீடு'**

--------------------

**www.thaiveedu.com**